2024 ஜூன் 25] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

முதல்வர் என்றால் இவர்தான் முதல்வர்; இவர்தான் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியிலே, கலாச்சாரத்திலே, இந்தச் சமூகத்தைத் தட்டி எழுப்புவதற்குப் பெண்கள் முக்கியம் என்றறிந்து, அவர்களுக்குக் கல்வி கொடுத்து, போக்குவரத்து வசதி கொடுத்து, இந்தச் சமூகத்தில் அத்தனை அடிப்படை வசதிகளையும் கொடுத்து, இந்தியாவிலேயே No.1 State என்று நான் ஆக்குவேன், மக்களுக்காகப் பணி செய்வேன் என்று ஒரு dedicated leadership என்றால் அவர்தான் என்று நான் சொல்வேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆங்கிலத்தில் சொன்னால், He is the best No.1 dynamic Chief Minister in India என்று சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய ஊர் கேரளப் பகுதிக்கு அருகாமையில் இருப்பதால், அதிகமான கேரள நண்பர்களைச் சந்திப்பேன். அவர்கள் மலையாளத்தில் கேட்பார்கள். ["Sir, Stalin Sir (மாண்புமிகு உறுப்பினர் மலையாளத்தில் பேசினார்), Chief Minister (மலையாளத்தில் பேசினார்), 40 seat (மலையாளத்தில் பேசினார்)" என்று மலையாளத்தில் கேட்பார்கள்.] "நாற்பது தொகுதிகளிலும் உங்கள் முதல்வர் வெற்றி பெறுவார் என்று பத்திரிகைகளில் சொல்லப்படுகிறதே, நடக்குமா?" என்று கேட்பார்கள். "Now, it is very possible. நடந்தது; நடக்கிறது; நடக்கப்போகிறது; நடந்துகொண்டே இருக்கிறது" என்று நான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட பெருமைக்குரிய, கடினமாக உழைக்கிற, தியாக உணர்வோடு பணியாற்றுகிற அத்தனை மக்களும் வாழ வேண்டும், எதிர்கால இந்தியா நமக்கு வேண்டும் என்று செயல்படுகிற, யாரும் செய்யாத பணிகளைச் செய்து பெருமைப் பெற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வரை நாம் பெற்றிருக்கிறோம். அதற்காக, காங்கிரஸ் கட்சி மீண்டும் உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது. எப்போதும் வாழ்த்துகளைத் தெரிவிக்க வேண்டும். எப்போதும் உங்கள் பணிகளைச் சிறப்பாக செய்வதற்கு, அதற்கு ஆக்கப்பூர்வமான ஆதரவைத் தருவதற்கு காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்கிறேன்.

சமூக நீதி காக்கப்பட்டிருப்பதே இன்று தமிழகத்தின் உயர்வுக்கு முக்கியக் காரணம் என்று சொல்வேன். மற்ற மாநிலங்கள் மாதிரி